# தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

## தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

## திருவாரூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(17.07.2021 முதல் 21.07.2021)

**அறிக்கை எண்: 57/2021** **தேதி 16.07.2021**

### திருவாரூர் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 32 °செ முதல் 34 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 23 °செ முதல் 25 °செ ஆகவும் பதிவானது. மேலும் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

### திருவாரூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (17.07.2021 முதல் 21.07.2021)

| கடந்த வார வானிலை (13.07.2021 முதல் 15.07.2021) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலைமுன்னறிவிப்பு (17.07.2021 முதல் 21.07.2021) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 13/07 | நாள்-2 14/07 | நாள்-3 15/07 | தேதி | நாள்-1 17/07 | நாள்-2 18/07 | நாள்-3 19/07 | நாள்-4 20/07 | நாள்-5 21/07 |
| 0 | 0 | 6.4 | மழை (மி.மீ.) | 4 | 3 | 4 | 3 | 3 |
| 34 | 33 | 32 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 36 | 36 | 36 | 36 | 36 |
| 25 | 25 | 23 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 26 | 26 | 26 | 26 | 26 |
| 4 | 4 | 4 | மேகமூட்டம் (ஆக்டா) | 7 | 7 | 7 | 7 | 7 |
| 75-66 | 70-75 | 74-67 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90-55 | 90-55 | 90-55 | 90-55 | 90-55 |
| 5 | 6 | 5 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 10 | 10 | 10 | 10 | 10 |
| மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | காற்றின் திசை | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு |

### திருவாரூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். 17.07.2021 முதல் 21.07.2021 ஆகிய தினங்களில் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 36 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 26 °செ ஆகவும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 90 சதவிகிதமாகவும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 55 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 10 கி.மீ. அளவுக்கு பெரும்பாலும மேற்கு தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

### வேளாண் அறிவுரைகள்

- ✓ தற்போது நிலவக்கூடிய வானிலையின் காரணமாக குருத்துப்பூச்சிகளை கட்டுப்படுத்த இனக் கவர்ச்சிப்பொறிகளை ஏக்கருக்கு 4 என்ற அளவில் வைத்து தாய் அந்துப் பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம். மேலும் இதனைக் கட்டுப்படுத்த புரோபனோபாஸ் மருந்தினை ஏக்கருக்கு 400

மில்லி (அ) கார்டிராப் ஹைட்ரோகுளோரைடு குருணைகளை ஏக்கருக்கு 6 கிலோ வீதம் சம அளவு மணலுடன் கலந்தும் இடலாம்.

- ✓ தற்போது நிலவக்கூடிய வானிலையின் காரணமாக சாகுபடி செய்யப்பட்டுள்ள நெற்பயிரில் இலைசிலந்தியின் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த டைக்கோபால் 500 மி.லி. / ஏக்கர் அல்லது நனையும் கந்தகத்தூள் 600 கிராம் / ஏக்கர் என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

- ✓ தென்னையில் குரும்மை கொட்டுதலை தவிர்பதற்க்கு ஆறு மாதத்திற்க்கு ஒரு முறை ஒரு பாக்கெட் தென்னை டானிக்கை 200 மிலி வேர் மூலம் அளிக்கவும்

- ✓ விவசாயிகள் ஆடு மற்றும் செம்மறி ஆடுகளின் உற்பற்த்தியை மேம்மடுத்த குடல் புழு நீக்கம் மற்றும் உண்ணிகளை நீக்கம் செய்ய அருகில் உள்ள கால்நடை மருந்தகத்தை அணுகவும். ஆட்டு கொட்டைகளில் தாது ஊப்பு கட்டியை கட்டி வைக்கலாம்.

## குறுஞ்செய்தி

- ✓ தென்னையில் குரும்மை கொட்டுதலை தவிர்பதற்க்கு ஆறு மாதத்திற்க்கு ஒரு முறை ஒரு பாக்கெட் தென்னை டானிக்கை 200 மிலி வேர் மூலம் அளிக்கவும்

**இயக்குநர்**